# TNPSC GROUP II MAIN EXAM

## கட்டாய தமிழ் தகுதித் தேர்வு - 2

**Total Marks: 100**
**Time : 3 hrs**

**கேள்வி எண் 1** **15 மதிப்பெண்கள்**

**1. பின்வருவனவற்றுள் ஏதேனம் ஒன்று குறித்து 300 சொற்களில் கட்டுரை வரைக**

1. திருக்குறள் மதச்சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியம் என்பதை சான்று தந்து விளக்குக
2. திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள் பற்றி சான்றுடன் விளக்குக
3. இன்றைய சமூக அரசியல் கருத்துக்களுக்கு திருக்குறள் எங்ஙனம் உதவுகிறது என்பதனைச் சான்று தந்து விளக்குக
4. அரசனுக்கு தேவையான இன்றியமையாத குணங்களாக திருக்குறள் குறிப்பிடுவதைச் சான்று தந்து விளக்குக
5. திருக்குறள் காட்டும் அறம் பற்றி சான்று தந்து விளக்குக

**கேள்வி எண் 2** **10 மதிப்பெண்கள்**

**2. பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் உள்ள வினாக்களுக்கு சுருக்கமாகவும், தெளிவாகவும் சரியான விடை எழுதுக**

ஒரு கப்பல் இங்கிலாந்தை நோக்கி 1921ஆம் ஆண்டு மத்திய தரைக்கடலில் சென்று கொண்டிருந்தது. தமிழர் ஒருவர் அக்கப்பலின் மேல் தளத்தில் நின்று கடல் அலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென அவரது உள்ளத்தில் கடல்நீர் ஏன் நீல நிறமாய்க் காட்சியளிக்கிறது என்னும் வினா எழுந்தது. அவ்வினா அவரை உறங்கவிடவில்லை. இங்கிலாந்துப் பயணம் முடித்து இந்தியா திரும்பினார். பிறகு பாதரச ஆவி விளக்கு, பென்சீன் மற்றும் நிறமாலைக்காட்டி ஆகியவற்றின் உதவியுடன் தனது ஆய்வைத் தொடங்கினார்.

ஆய்வின் முடிவில் 1928 பிப்ரவரி 28ஆம் நாள் ‘‘இராமன் விளைவு’’ என்னும் தமது கண்டுபிடிப்பை வெளியிட்டார். இக்கண்டுபிடிப்பு இந்தியாவிற்கு அறிவியலுக்கான முதல் நோபல் பரிசைப் பெற்றுத்தந்தது. அவர் தமது கண்டுபிடிப்பை வெளியிட்ட பிப்ரவரி 28ஆம் நாளை நாம் ஆண்டு தோறும் ‘‘தேசிய அறிவியல் நாள்’’ எனக்கொண்டாடி மகிழ்கிறோம். அவர்தான் சர்.சி.வி. இராமன்.

**வினாக்கள்**

1. இராமன் விளைவைக் கண்டறிந்தவர் யார்?
2. "தேசிய அறிவியல் நாள்" எப்போது கொண்டாடப்படுகிறது? ஏன்?
3. சர்.சி.வி. இராமன் தனது கண்டுபிடிப்பிற்கு பயன்படுத்திய பொருட்கள் யாவை?
4. இராமன் விளைவு கண்டுபிடிப்பதற்கு சர்.சி.வி. இராமனுக்கு காரணமாக இருந்த நிகழ்வு என்ன?
5. சர்.சி.வி. இராமன் எங்கு, எந்த வருடம் கப்பலில் பயனம் மேற்கொண்டார்?

**கேள்வி எண்.3** **10 மதிப்பெண்**

**3. கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை**

நிகழ்கலைகள் என்பன தெருக்கூத்து, தோற்பாவை கூத்து பொய்க்கால் குதிரையாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், புலியாட்டம் போன்ற கலைவடிவங்கள் ஆகும். இவற்றுள் பலகலைகள் ஏற்று ஆடுபவர்கள் இல்லாமையால் அருகிவிட்டன. 'ஒரு காலத்தில் இக்கலைகள் மக்கள் வாழ்வுடனும் பண்பாட்டுடனும் வளர்ந்திருந்தன. கோவில் திருவிழாக்கள், ஊர்வலங்கள், ஆன்மீக விழாக்கள், சமூக நிகழ்வுகள், சமயம் சார்ந்த விழாக்கள் ஆகியனவற்றில் இவை இடம் பெற்றிருந்தன.

தமிழ் நாடகக்கலையின் அடித்தளமே தெருக்கூத்து ஆகும். நவீன நாடகக்கலையின் வளர்ச்சியில் தெருக்கூத்து சுருங்கியது. நம் பாரம்பரியக் கலைகளில் இசையும் ஆட்டமும் பின்னிப்பிணைந்திருந்தன. இன்று தெருக்கூத்து நாடக நடிகர்களுக்குப் பரிசுகளும், விருதுகளும் அரசு சார்பில் அளிக்கப்படுகின்றன. அவர்களை ஊக்குவிக்க மேலும் பல தனியார் நிறுவனங்கள் முன்வர வேண்டும். நிகழ்கலைக் கலைஞர்கள் பெரும்பாலும் பொருளாதார மேம்பாடு இல்லாதவர்கள் ஆவார்கள். அவர்களை அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் தத்தெடுத்து உதவ வேண்டும்.

நாடகம், சினிமா, தொலைக்காட்சி ஆகியவற்றை மக்கள் விரும்பிக் காண்பதைப் போல நிகழ்கலைகள் நடைபெறும் இடங்களுக்குச் சென்று, கண்டு ஊக்குவிக்க வேண்டும். குறும்படங்கள் தயாரிப்போர் நிகழ்கலையைத் தம் குறும்படங்களில் இடம்பெறச் செய்யலாம். நிகழ்கலைக் குறித்து ஆய்வுப்படங்கள் எடுக்கலாம். பல்கலைக் கழகங்களில் இவற்றைப் பாடமாக வைத்து ஊக்கப்படுத்தலாம்.

பல நூறு ஆண்டுப் பழமை வாய்ந்த இந்நிகழ்கலையைப் போற்றி வளர்க்க வேண்டும். நம் பண்பாட்டையும் சிறப்பையும் உலகம் அறிய நாடகத் தினமான மார்ச் 27ஆம் நாளை 'நிகழ்கலை நாள்' என அறிவித்து கலைஞர்களை ஊக்கப்படுத்தலாம். அரங்கங்கள் அமைத்து பொருட்காட்சி, கண்காட்சி போன்ற நிகழ்கலையை காட்சிப்படுத்தி இளந்தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லலாம்.

**கேள்வி எண் 4:** **10 மதிப்பெண்கள்**

**4. பின்வரும் சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல் (300 வார்த்தைகளுக்கு மிகாமல்)**

சங்க காலம் - நடுகற்கள் - சிற்பங்கள் - பல்லவர்காலம் - சோழர்காலம் - செப்புத்திருமேனிகள்

**கேள்வி எண் 5:** **10 மதிப்பெண்கள்**

**5. பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக**

கேரளத்தின் எர்ணாகுளம் மாவட்டத்தில் உள்ள வடக்குப் பரவூர் என்ற ஊரை ஒட்டிய வடக்கேகரா என்ற சிற்றூரின் அருகே பட்டணம் அமைந்துள்ளது. மேலை நாடுகளோடும் கீழை நாடுகளோடும் வணிகத் தொடர்பு கொண்டிருந்த பழங்காலத் துறைமுகம்தான் பட்டணம்.

கொடுமணல் தமிழ்நாட்டில் ஈரோடுக்கு அருகில் உள்ளது. சங்க இலக்கியமான பதிற்றுப்பத்தில் குறிப்பிடும் கொடுமணம்தான் இவ்வூர் எனக் கருதப்படுகிறது. பெருங்கற்கால முதுமக்கள் தாழிகளும் இரும்பு, மாணிக்க கற்கள் சங்கு வேலைபாடுகள் குறித்த சான்றுகளும் இங்கே கிடைத்துள்ளன. தமிழ் - பிராமி எழுத்துக்கள் கொண்ட 300க்கும் மேற்பட்ட மட்கலப் பொறிப்புகள் இந்த ஊரில் கிடைத்துள்ளன.

மதுரையிலிருந்து இராமேஸ்வரம் செல்லும் நெடுஞ்சாலையில் சிலைமான் என்ற ஊருக்கு அருகில் கீழடி உள்ளது. இங்கே பள்ளிச் சந்தை திடல் என்று அழைக்கப்படும் பரந்த தென்னந் தோப்பில் இந்திய தொல்லியல் ஆய்வுத்துறையினர் மேற்கொண்ட அகழாய்வுகளின் மூலம் சங்க காலத்து நகரம் புதையுண்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. செங்கல் கட்டுமானங்கள், கழிவு நீர் வழிகள், தமிழ் - பிராமி எழுத்துக்கள் கொண்ட மட்கல ஓடுகள், செம்மணிக்கற்களாலான அணிகலன்கள், முத்து, இரும்பு பொருட்கள், விளையாட்டுப்பொருட்கள், கண்ணுக்கு மை தீட்டும் செப்புக்கம்பி போன்றவை கண்டறியப்பட்டுள்ளன. இன்னும் அகழாய்வு மேற்கொண்டால், கைத்தொழில் முறைகள் மற்றும் பண்பாட்டு நடவடிக்கைகள் குறித்து பல தகவல்கள் வெளிவரும்.

**கேள்வி எண் 6:** **10 மதிப்பெண்கள்**

**6. பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்கவும்**

In order to achieve Social Justice, it is often suggested that reservation policy is an important tool. We must realize that reservation in education and in jobs is one of the methods to achieve 'Social Justice' and not the only method. Social Justice must necessarily premise upon the idea of egalitarian philosophy that no one is inferior or superior to anyone by birth.

Those who have been benefitted extensively by the philosophy of ascriptive status. (status based on birth) must realize that such status cannot be part of a modern world to be a modern person what is more important is to have the consciousness of being equal to every body around us. Unfortunately 'modern' is being equated with latest electronic items and luxury items we possess. Having latest gadgets will not make us modern. For India to become a

modern nation, this radical transformation is required more than anything. That is why the social justice is organically embedded in the idea of modern India.

**கேள்வி எண் 7:** **15 மதிப்பெண்கள்**

**அலுவலகக் கடிதம்**

7. **உங்கள் தெருவில் மின் விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி, ஆவண செய்யும்படி மின்வாரிய அலுவலருக்கு கடிதம் எழுதுக**

**கேள்வி எண் 8:** **20 மதிப்பெண்கள்**

a. **கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக**

1. நாகரிகம்
2. புகலிடம்
3. தென்றல்
4. இயற்கை மருத்துவம்

b. **பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க**

1. வாழை - வாலை
2. மனம் - மணம்
3. வால் - வாள்
4. உரவு - உறவு

c. **பிரித்து எழுதுக**

1. செந்தமிழ்
2. பாகற்காய்
3. திருவாலங்காடு
4. வடதிசை

d. **எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக**

1. வயலில் ஆடுகள் மேய்ந்தன
2. குதிரைகள் வேகமாக ஓடும்
3. யாழினி சிலப்பதிகாரம் கல்லாள்
4. தமிழகத்தில் பெரியாரை அனைவரும் அறியார்

e. **பிழை நீக்கி எழுதுக**

1. புலி வந்தன; எருதுகள் ஓடியது
2. சாரை பாம்பு குருவி கூட்டில் நுழைந்தது
3. மரத்தின் கணியைப் பரித்து உண்டான்
4. பூ மனம் வீசியது